## *15*

# "தீர்ப்பிடாதிருங்கள்"

## (மத்தேயு 7:1, 2)

*மலைப்பிரசங்கம் பற்றிய நமது படிப்பில் நாம், மத்தேயு 7ம் அதிகாரத்திற்கு வந்திருக்கிறோம். இந்த அதிகாரம் பலவகைப் பாடக்கருத்துக்களைத் தொடுகிறது. இதன் விளைவாகச் சிலர், இந்த அதிகாரம் தொடர்பற்ற போதனைகளின் தொகுப்பாக உள்ளது என்று நினைக்கின்றனர். இருப்பினும், நெருங்கிக் கண்ணோக்குதலானது, இந்தக் கூறுகளில் பெரும்பான்மையானவை, இரு முதன்மை ஆய்வுக்கருத்துக்களுடன் தங்களைக் காத்துக்கொண்டிருப்பதைக் காண்பிக்கும். இவற்றில் முதலாவது, நாம் இவ்வுலகத்தில் வாழ்கையில் மற்றவர்களுடன் எவ்வாறு உறவுபடுகிறோம் என்பதைப் பற்றியதாகவும், இரண்டாவது, கர்த்தருக்குக் கீழ்ப்படிதலின் முக்கியத்துவத்தைப் பற்றியதாகவும் உள்ளது.*

*மற்ற மக்களுடன் உறவுபடுதல் என்பது, கிறிஸ்தவ வாழ்வை வாழுதலில் நாம் யாவரும் எதிர்கொள்ளும் ஒரு அறைகூவலாக உள்ளது. இந்தப் பாடக்கருத்தைப் பற்றிப் பல புத்திமதிகளை, மலைப்பிரசங்கத்தில் நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளோம்: மற்றவர்களிடம் இரக்கம் காண்பித்தல் (5:7), சமாதானம் பண்ணுகிறவர்களாயிருத்தல் (5:9), நற்செல்வாக்குடன் இருத்தல் (5:13-16) மற்றும் சகோதரர் ஒருவருடன் கோபமாயிருத்தலுக்கு மாறாக அவரோடு ஒப்புரவாகுதல் (5:21-24). நம்மைத் துன்புறுத்த முயற்சி செய்பவர்களுடன் (அதாவது, நமது விரோதிகளுடன்) உறவுபடுதல் எவ்வாறு என்றுகூடக் கிறிஸ்து போதித்தார் (5:38-48). இப்போது 7:1-12ல் நாம், இந்த முக்கியமான தலைப்பிற்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட ஒரு முழுப்பகுதியைக் கொண்டுள்ளோம்.*

*இவ்வசனங்களில் இருந்து ஆறு கொள்கைகள் - மற்ற மக்களுடன் இணக்கமாயிருப்பதற்கான ஆறு அத்தியாவசியத் தேவைகள் - தரவழைக்கப்படலாம். இவற்றில் முதலாவதை இந்தப் பாடத்தில் இரு வசனங்களில் மாத்திரம் நாம் எடுத்துரைத்து முடிப்போம். முதல் இரு வசனங்கள் தீர்ப்பிடுதல் மீதானதாக இருப்பதால், இந்த எடுத்துரைப்பை, நான், "தீர்ப்பிடாதிருங்கள்" என்று அழைக்கிறேன்.*

## *இயேசு கட்டளையிட்டது என்ன (7:1அ)*

*நாம் மற்றவர்களுடன் இணக்கமாயிருக்க வேண்டும் என்றால், முதலில் நாம் தீர்ப்பிடுபவர்களாக இருத்தலை நிறுத்த வேண்டும் என்று இயேசு கூறினார். இவ்வசனப்பகுதி, "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" என்று தொடங்குகிறது. மூல வசனத்தில் பயன்படுத்தப்பட்ட வடிவமானது, அவரது உரையைக் கேட்டுக்கொண்டிருந்தவர்கள், தீர்ப்பிடுபவர்களாக இருத்தலை நிறுத்துதல்*

அவசியமாயிருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது.[1] வில்லியம் அவர்களின் மொழிபெயர்ப்பில், “மற்றவர்களை விமர்சித்தலை நிறுத்துங்கள்” என்றுள்ளது.[2]

**உலகளாவிய தேவையைச் சந்தித்தல்**

இது, மிகவும் நேர்மறையான பொன் விதியுடன் முடிகிற, உறவுமுறைகள் மீதான வசனப்பகுதியைத் தொடங்குவதற்கான எதிர்மறையான வழியாக இருப்பதாகக் காணப்படுகிறது. பல காரணங்களுக்காக இயேசு இதுபோன்று தொடங்கியிருக்கலாம். அவரது உரையைக் கேட்டவர்களுக்கு இந்தப் புத்திமதி தேவைப்பட்டது என்ற காரணத்தால், நியாயந்தீர்த்தல் பற்றிய எச்சரிக்கையுடன் அவர் தொடங்கியிருக்கலாம். இன்றைய நாட்களில் இதே புத்திமதி நமக்குத் தேவைப்படுகிறது. மத்தேயு 7:1ல் இயேசுவின் கட்டளையை மீறாமல் அனேகமாக, நம்மில் ஒவ்வொருவருக்கும் எந்த ஒரு இருபத்தி நான்கு மணி நேர கால வேளையும் கடந்து செல்வதில்லை என்றே கூறலாம். அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படியத் தவறுதல் என்பதைக் காட்டிலும் அதிகமாக, வேறு எதுவும் அவ்வளவு விரைவில் உறவுமுறை ஒன்றை அழிப்பதில்லை.

**மோசமான செல்வாக்கை முன் அமைத்தல்**

மீண்டுமாக, வேதபாரகர்களும் பரிசேயர்களும் இயேசுவின் சிந்தையில் இருந்து ஒருக்காலும் வெகுதொலைவில் இருந்ததில்லை[3] என்ற காரணத்தினால் இயேசு, நியாயந்தீர்த்தல் பற்றிய பாடத் தலைப்புடன் தொடங்கி இருக்கலாம். லூக்கா சுவிசேஷத்தின்படி, இயேசு எங்கு சென்றாலும் அவரை ஏற்கனவே அவர்கள் பின்தொடர்ந்து, அவரைக் குற்றப்படுத்தப் பயன்படுத்துவதற்காகச் சில தவறுகளைக் கண்டறிய முயற்சி செய்துகொண்டிருந்தனர் (காண்க லூக்கா 6:1-7). யோவான் சுவிசேஷத்தின்படி, (பரிசேயர்கள் உட்பட) அவரது விரோதிகள், அவரைக் கொல்வதற்கு ஏற்கனவே திட்டங்களைத் தீட்டிக்கொண்டிருந்தனர் (காண்க யோவான் 5:18).

வேதபாரகர்களும் பரிசேயர்களும், இயேசு பழித்துரைத்த வகையிலான நியாயந்தீர்த்தல் செய்த வகையில் குற்றப்பட்டிருந்தனர். அவர்கள் சமூகத்தின் பெரிய பிரிவுகளைக் கண்டனம் செய்திருந்தனர்: ஆயக்காரர்கள் (லூக்கா 18:9-14), சமாரியர்கள் மற்றும் புறஜாதியார். மற்றும் அவர்கள் மற்ற எல்லாரைக் காட்டிலும் தங்களை உயர்வானவர்களாகக் கண்ணோக்கினர். அவர்கள் மற்றவர்களைத் தாழ்வாகக் கண்ணோக்கி மற்றவர்கள் மீது சிறிதளவே இரக்க உணர்வு காண்பித்தனர். நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க விரும்பினால், நமது நீதியானது “வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் … அதிகமாக” இருக்க வேண்டும் (மத்தேயு 5:20).

**எதிர்மறை அம்சத்தை நீக்கிப்போடுதல்**

உறவுமுறைகளில் நேர்மறையான அம்சத்தைப் பெறுவதற்கு முன்னர் அவற்றில் உள்ள எதிர்மறையான அம்சத்தை நீக்கிப்போட இயேசு விரும்பியதாலும்கூட அவர் இவ்வாறு தொடங்கி இருக்கலாம். நாம் மலர்ச்செடிகளை நடுவதற்கு முன்னர், சிலவேளைகளில் களைகளைப் பிடுங்கி எறிய வேண்டியுள்ளது. காரணம் எதுவாக இருந்தாலும், மற்றவர்களுடன் இணக்கமாயிருத்தல் பற்றிய கிறிஸ்துவின் கலந்துரையாடலை அவர் தொடங்கிய

இடம் இதுவாகவே உள்ளது: "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்."

## இயேசு அர்த்தப்படுத்தாதது என்ன (7:1அ)

உலகசிந்தை கொண்டவர்களும் வேதாகமத்தை அறியாதவர்களும், வேதவசனங்களில் ஒருசிலவற்றை மாத்திரம் அறிந்துள்ளனர், அவற்றில் இதுவும் ஒன்றாக உள்ளது.[4] தேவபக்தியற்ற மக்கள் இதன் KJV சொற்றொடராக்கத்திற்கு விசேஷமாய்ப் பழக்கமாகியுள்ளனர்: "Judge not, that ye be not judged."

குற்றம் செய்தவர்கள் அல்லது குற்றம் செய்தவர்கள் மீது பரிவிரக்கம் உடையவர்களின் உதடுகளில் இருந்து இந்த வார்த்தைகளை நான் மிகவும் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன். "தீர்க்காதிருங்கள்" என்ற வார்த்தையை, எவரொருவரும் தவறானவர் என்று நாம் ஒருக்காலும் கூறக்கூடாது என்று அர்த்தப்படும் வகையில் இந்த மக்கள் விளக்கப்படுத்துவார்கள். மனந்திரும்பவும் தங்கள் வாழ்வை மாற்றிக்கொள்ளவும் மறுக்கிறவருக்கு, பாவிகளுக்காகக் காத்திருக்கிற பயங்கரமான விளைவுகளைப் பற்றிக் கிறிஸ்தவர்கள் எச்சரிக்கை வேண்டும் என்பதை அவர்கள் நம்புவதில்லை. இயேசு போதிக்க நோக்கங் கொண்டிருந்தது இதுதானா? மத்தேயு 7:1ல் "தீர்க்குதல்" என்ற வார்த்தை எதை *அர்த்தப்படுத்துகிறது* என்று குறிப்பிடுவதற்கு முன்னர், அது எதை அர்த்தப்படுத்து*வதில்லை* என்பதை முதலில் வலியுறுத்த என்னை அனுமதியுங்கள்.

### இது குடிமைத் தீர்ப்புக்கு எதிரானதல்ல

வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்பதால், இயேசுவின் வார்த்தைகள், நாம் குடிமைத் தீர்ப்புக்கு (அதாவது, நாட்டின் நீதிமன்றங்களின் தீர்ப்புகளுக்கு) அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்து*வதில்லை.* நியாயந்தீர்க்கும் உரிமையை, தேவன் குடிமை அரசுகளுக்குக் கொடுத்தார் (காண்க 1 பேதுரு 2:13, 14, தீத்து 3:1; ரோமர் 13:1).

### இது சபை ஒழுங்கு நடவடிக்கையை நீக்கிப்போடுவதில்லை

பின்வரும் பதிலுரையை நான் முன்னெதிர் நோக்குகிறேன்: "இவ்வசனப்பகுதி குடிமை நியாயத் தீர்ப்புகளைப் பற்றிக் குறிப்பிடுவதில்லை என்பது உண்மையே. இது ஒரு சபைக்குழுமமோ அல்லது அதன் மூப்பர்களோ அதன் [சபையின்] உறுப்பினர்களில் எவரையாவது, தவறு செய்திருப்பதாகக் கூறி, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தலைக் கண்டனம் செய்கிறது!" சபையைச் சாராதவர்கள் மாத்திரமல்ல, ஆனால் சபை உறுப்பினர்களில் சிலரும்கூட இவ்வாறே உணருகின்றனர். ஒரு சபைக் குழுமத்தின் நடத்துனர் ஒருவர் என்னிடத்தில், "நான் ஊழியம் செய்கிற இடத்தில் நாங்கள் எவரொருவரிடம் இருந்தும் ஐக்கியத்தை விலக்கிக் கொள்வதில்லை. இயேசு, 'நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்' என்று கூறியிருக்கிறாரே" என்று கூறினார்.

வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்று நான் மறுபடியும் கூறுகிறேன். விஷயம் இப்படி இருக்கையில், மத்தேயு 7:1 வசனமானது, நாம்

*சபை ஒழுங்கு நடவடிக்கையை ஒருக்காலும் செயல்படுத்தக் கூடாது என்று போதிப்பதில்லை. "தீர்க்காதிருங்கள்" என்று கூறிய அதே இயேசு, சபை ஒழுங்கு நடவடிக்கையைச் செயல்படுத்தும்படியும் நமக்குப் போதித்தார் (மத்தேயு 18:15-17). அப்போஸ்தலர்களைச் சகலசத்தியத்திலும் வழிநடத்தும்படி பரிசுத்த ஆவியானவரை அவர் [இயேசு] அனுப்பியபோது (யோவான் 16:13), சபை ஒழுங்கு நடவடிக்கையின் அவசியம் பற்றிய வல்லமை நிறைந்த வசனப்பகுதிகளை எழுதும்படி அவர், பவுலையும் மற்றவர்களையும் ஏவினார் (1 கொரிந்தியர் 5:5, 9; 2 தெசலோனிக்கேயர் 3:6, 14, 15; தீத்து 3:9-11).*

**இது தனிப்பட்ட நியாயந்தீர்க்குதலைக் கண்டனம் செய்வதில்லை**

*பின்வருவது போன்ற இன்னொரு பதிலுரையையும் நான் முன்னெதிர் நோக்குகிறேன்: "ஒருவேளை இவ்வசனப் பகுதி, சபை ஒழுங்கு நடவடிக்கையைப் பற்றிப் பேசாதிருக்கலாம், ஆனால் இது குறைந்தபட்சமாக, தனிநபரான கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம், யாரேனும் ஒருவர் ஒழுக்கரீதியாக அல்லது உபதேசரீதியாகத் தவறானவராக இருக்கிறார் என்று கூறும் உரிமை கொண்டிருப்பதில்லை என்று போதிக்கிறது." மீண்டும் ஒருமுறை நான், வேதாகமம் தனக்குத்தானே முரண்படுவதில்லை என்று வலியுறுத்துகிறேன். இது உண்மையாக இருக்கையில், மத்தேயு 7:1ம் வசனம், மற்ற மக்களைக் குறித்து நாம் ஒருக்காலும் நியாயந்தீர்க்கக்கூடாது என்று போதிப்பதில்லை. மத்தேயு 7:3-12 வசனப்பகுதியின் மீதான பாடத்தில் நாம், "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்; உங்கள் முத்துகளைப் பன்றிகள்முன் போடாதேயுங்கள்; ..." என்று கூறும் 6ம் வசனத்தைப் பற்றிப் படிப்போம். "நாய்கள்" யார் மற்றும் "பன்றிகள்" யார் என்று நியாயந்தீர்க்காமல் நாம் அந்தக் கட்டளைக்குக் கீழ்ப்படிய இயலாது. பிந்திய ஒரு பாடத்தில் நாம், கள்ளத்தீர்க்கதரிசிகளின் உழைப்பின் "கனிகளினால்" நாம் அவர்களை அறிந்துகொள்ள முடியும் என்று கூறி, கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எதிரான எச்சரிக்கை செய்கிற மத்தேயு 7:15-20 வசனங்களைப் படிப்போம்: "அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்" (வசனம் 16அ). (கடந்த காலத்தில் பிரசங்கியார்கள், "நாம் நியாயாதிபதிகள் அல்ல; நாம் கனிகளை ஆய்வு செய்பவர்கள்" என்று அடிக்கடி கூறியுள்ளனர்.) மற்றவர்களைப் பற்றி முடிவு செய்யும்படி நாம் அடிக்கடி கேட்டுக்கொள்ளப்படுவதை இன்னும் பல வசனங்கள் சுட்டிக்காண்பிக்கின்றன (ரோமர் 16:17; கலாத்தியர் 1:8, 9; பிலிப்பியர் 3:2; 1 யோவான் 4:1).*

## இயேசு அர்த்தப்படுத்தியது என்ன (7:1அ)

*"நமது வேதவசனப் பகுதியில் 'நியாயந்தீர்த்தல்' என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது?" என்ற கேள்விக்கு நாம் இன்னமும் பதில் அளித்தல் அவசியமாக உள்ளது. "நியாயந்தீர்த்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (krino என்ற) கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம்,* "criticize" *என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகிறோம். பொதுவாக நாம்,* "criticize" *என்ற வார்த்தையை - மற்றொருவரிடம் உள்ள பிழைகளைச் சுட்டிக்காண்பித்தல் என்ற - எதிர்மறைக் கருத்திலேயே நினைத்துப் பார்க்கிறோம், ஆனால்* "criticize" *என்ற வார்த்தை தொடக்கத்தில் "மதிப்பீடு செய்ய" என்று அர்த்தப்பட்டது. அந்த*

மதிப்பீடு செய்தல் எதிர்மறையானதாகவோ அல்லது நேர்மறையானதாகவோ இருக்கக்கூடும்; அது மோசமானதாக அல்லது நல்லதாக இருக்கக் கூடும்; அது அழிக்கக்கூடியதாக அல்லது கட்டியெழுப்பக்கூடியதாக இருக்கக் கூடும். இயேசுவேகூட, தமது உரையைக் கேட்ட ஒரு குழுவினரிடம் "நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்று கூறினார் (யோவான் 7:24ஆ).

மத்தேயு 7:1ம் வசனம், மற்றவர்களைப் பற்றி தீர்ப்புக்கூறுதலுக்கு எதிராக, எல்லாவற்றையும் உள்ளடக்கிய கட்டளையாக இருப்பதில்லை. ஆதாரத்தை எடைபோட, மதிப்பீடு செய்ய மற்றும் தீர்ப்பு செய்யத் திறமையைத் தேவன் நமக்குக் கொடுத்துள்ளார். இருப்பினும் இயேசுவின் வார்த்தைகள், நாம் தவிர்க்க வேண்டிய *குறிப்பிட்ட வகையிலான* தீர்ப்பிடுதல் உள்ளது என்று போதிக்கின்றன. இயேசு கண்டனம் செய்கிற வகையிலான தீர்ப்பிடுதலின் பல அம்சங்களை நான் ஆலோசனையாகத் தெரிவிக்க என்னை அனுமதியுங்கள்.

**ஒருதலைப் பட்சமான தீர்ப்பு**

நமது பின்னணி, தவறான அபிப்பிராயம் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றை நமது தீர்ப்புகள் மீது செயல்விளைவு ஏற்படுத்த அனுமதித்தல் என்பது பொதுவான குறையாக உள்ளது. இதைத் தவிர்ப்பது கடினமாக இருக்கிறது. சிலவேளைகளில், பழங்காலக் கிரேக்கர்கள், உண்மைகளினால் மட்டுமே சாய்க்கப்படும்படிக்கு, முக்கியமான விசாரணைகளை இருளில் நடத்தினர் என்று நான் வாசித்திருக்கிறேன். தாழ்வான சுய மதிப்பீட்டினால் துன்புறுவதாலேயே பலர் தீர்ப்புச் செய்கிறவர்களாக உள்ளனர் என்று சமூகவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஒருவர் தம்மைக் குறித்துத் தாழ்ந்த கருத்துக் கொண்டிருக்கும்போது, ஒன்று அவர் தம்மை உயர்த்தக்கூடும் அல்லது அவர் மற்றவர்களைக் கீழே தாழ்த்தக்கூடும். மற்றவர்களைக் கீழே இழுத்துப்போடுதல் மிகசுலபமாக இருப்பதாகப் பலர் கண்டறிகின்றனர்.

**சீரற்றவகையிலான தீர்ப்பு**

நாம் அடிக்கடி, எல்லா உண்மைகளையும் பெற்றுக்கொள்ளாத நிலையில் அல்லது எல்லாச் சூழ்நிலைகளையும் அறிந்திராத சூழ்நிலையில் அவசரமாகத் தீர்ப்பிடுகிறோம். நம்மில் சிலர், அரைகுறையான சூழ்நிலையின் அரை டஜன் செங்கற்களை எடுத்துக்கொண்டு, குற்றச்சாட்டின் உயர்ந்த சுவர் ஒன்றைக் கட்டியெழுப்பக் கூடியவர்களாக இருக்கிறோம். உண்மையில் என்ன நடந்தது என்பதை நாம் அடிக்கடி அறிவதில்லை. குற்றம்சாட்டப்பட்டவரின் பின்னணி அல்லது நோக்கம் பற்றிய உண்மையை நாம் அறிவதில்லை. குற்றம்சாட்டப்பட்டவரின் வாழ்வில் இது விதியாக இருந்ததா அல்லது விதி விலக்காக இருந்ததா என்பதைப் பற்றிய எல்லா உண்மைகளையும் நாம் கொண்டிருப்பது இல்லை. திரளான கூட்டத்தாரிடம் இயேசு, "நீதியின்படி தீர்ப்புசெய்யுங்கள்" என்று கூறினார்; ஆனால் முதலில் அவர், "தோற்றத்தின்படி தீர்ப்புசெய்யாமல்" என்று கூறினார் (யோவான் 7:24).

**சாத்தியமற்ற வகையிலான தீர்ப்பு**

நாம் மற்றவர்களைத் தீர்ப்பிடுகையில் அடிக்கடி, நோக்கங்கள் பற்றித் தீர்ப்பிடுகிறோம். நாம், "மனுஷருள்ளத்திலிருப்பதை ... அறிந்திருந்த" (யோவான்

*2:25) இயேசுவாக இருப்பதில்லை என்பதால், இன்னொரு நபரின் நோக்கங்களைப் பற்றி நாம் உறுதியாக எதையும் கூறுவதற்கு வழியெதுவும் இல்லை. நாம் "அவர் இதைச் செய்தார் அல்லது அதைச் செய்தார்" என்று கூறமுடியும்; ஆனால் நாம், "அவர் இதை அல்லது அதைச் செய்தார், ஏனென்றால் ..." என்று உறுதியுடன் கூற முடியாது. பவுல், "மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான் (அறிதல் அல்லது புரிந்துகொள்ளுதல்)?" என்று கேட்டார் (1 கொரிந்தியர் 2:11அ). இருந்தபோதிலும் பின்வருபவை போன்ற வார்த்தைகளை நாம் அடிக்கடி கேள்விப்படுகிகிறோம்: "அவள் தன்னை அதிபுத்திசாலி என்று நினைத்துக் கொள்கிறாள்!"; "அவர் உண்மையிலேயே தம்மை ஒரு பெரிய மனிதராக நினைத்துக் கொள்கிறார்!"[5] மற்றவர்களின் நோக்கங்களைப் பற்றி நம்மில் ஒவ்வொருவரும் எவ்வளவு அடிக்கடி தீர்ப்புச் செய்கிறோம்!*

***பரிவிரக்கமற்ற தீர்ப்பு***

*மக்கள் என்ன செய்கின்றனர் என்பதன் மீது சாத்தியமான வகையில் மிகமோசமான (வார்த்தை) கட்டமைப்பை இடுதலையும் இயேசு கண்டனம் செய்தார். அதற்குப்பதிலாக நாம், அவற்றை நம்மால் இயன்ற அளவுக்கு மிகச்சிறப்பான வகையில் கண்ணோக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஜேம்ஸ் மொஃபாட் அவர்களின் வேதாகம மொழிபெயர்ப்பில், 1 கொரிந்தியர் 13:7ம் வசனமானது, "அன்பு எப்போதுமே மிகச்சிறந்ததை நம்பப் பேரார்வம் உடையதாக உள்ளது" என்று உள்ளது. ஒருநபர் செய்யும் விஷயங்களில் இருந்து நாம், அவரைப்பற்றி அதிகமாக அறிய முடியும் என்பது உண்மையே, ஆனால் சிலவேளைகளில் அவரது செயல்பாடுகள் குறைந்தபட்சம், மாறுபட்ட இரு விளக்கங்களைத் தரக்கூடியவையாக உள்ளன: ஒன்று நல்லது மற்றும் ஒன்று மோசமானது. விஷயம் இவ்வாறு இருக்கும்போது, அவர் செய்துள்ளது பற்றிய எந்த விளக்கத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம்?*

***கடுமையான தீர்ப்பு***

*மேலே பட்டியலிடப்பட்ட, தீர்ப்பிடுதல் பற்றிய எதிர்மறையான அணுகுமுறைகளின் விளைவாக, சிலவேளைகளில் நாம் நமது தீர்ப்பிடுதலில் கடுமையாக, கசப்பாக மற்றும் மாய்மாலமாக இருக்கிறோம். அதற்குப்பதிலாக நாம் நமது தீர்ப்பிடுதலை, இரக்கத்தினாலும் அன்பினாலும் சரியாக்க வேண்டும். பேதுரு, "எல்லாவற்றிகும் மேலாக ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாயிருங்கள்; அன்பு திரளான பாவங்களை மூடும்" (1 பேதுரு 4:8) என்று கூறினார். மற்றவர்களுடன் இணக்கமாக இருத்தல் என்பது பெரிதும் ஆவிக்குரியதாக உள்ளது: ஒரு புறத்தில், (பிறரை) மேலே உயர்த்தவும் உதவிசெய்யவும் மிகச்சிறந்ததை நம்பி முயற்சி செய்கிற பரிவிரக்கமுள்ள அன்புகூருகிற ஆவி உள்ளது. இன்னொரு புறத்தில், யாரேனும் ஒருவர் "தமது செய்கைக்குத் தக்க பலனை அடைதலை" காண்பதில் மகிழ்வடைகிற, கடுமையான, பரிவிரக்கமற்ற, தீர்ப்பிடுகிற ஆவி உள்ளது.*

# இயேசு வாக்குத்தத்தம் செய்தது என்ன (7:1ஆ, 2)

**இரக்கத்திற்கான தேவை**

இயேசு, "நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு" (வசனம் 1அ) என்று கூறியபின்பு, அவர் "மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்" (வசனம் 1ஆ) என்றும் கூடுதலாகக் கூறினார். பின்பு அவர் அந்தச் சிந்தனையை 2ம் வசனத்தில் விரித்துரைத்தார்: "ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்." இது பூமியின்மீதே கூட ஓரளவிற்கு உண்மையானதாகவே உள்ளது. வாழ்வு என்பது கண்ணாடியைப் போன்றது. நாம் மற்றவர்களை எவ்வாறு நடத்துகிறோமோ அவ்வாறே நாமும் அடிக்கடி நடத்தப்படுகிறோம். இது, லூக்கா சுவிசேஷ விபரத்தில் பிரசங்கத்தின் இப்பகுதியின் வலியுறுத்தமாக இருக்கலாம்:

> மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள்; அப்பொழுது நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதிருப்பீர்கள்; மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகும்படி தீர்க்காதிருங்கள், அப்பொழுது நீங்களும் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படாதிருப்பீர்கள்; விடுதலைபண்ணுங்கள், அப்பொழுது நீங்களும் விடுதலைபண்ணப்படுவீர்கள். கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்[6] (லூக்கா 6:37, 38).

லூக்கா 6:37ஆ வசனப் பகுதியில், LB பொழிப்புரை வேதாகமத்தில், "மற்றவர்களை மென்மையாக நடத்துங்கள்; அப்போது அவர்களும் உங்களுக்கு அதையே செய்வார்கள்" என்றுள்ளது.

இருப்பினும் சந்தர்ப்பப்பொருளில் இயேசு, *தேவனுடைய* நியாயத்தீர்ப்பைப் பற்றி விசேஷமாகக் குறிப்பிட்டார். விரைவிலேயோ அல்லது தாமதமாகவோ, நாம் விதைத்ததை அறுக்கிறோம் என்பது இந்த அண்டத்தின் கட்டுமானத்தில் நெய்யப்பட்டகொள்கையாக உள்ளது (கலாத்தியர் 6:7). ஆமான் மொர்தெகாய்க்குத் தயார்செய்து வைத்திருந்த தூக்குமரத்திலேயே தூக்கில் இடப்பட்டான் (எஸ்தர் 7:10). பிரசங்கி 10:8அ வசனம், "படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான்" என்று கூறுகிறது. குறிப்பாக மத்தேயு 7:1, 2ம் வசனங்கள் தேவனுடைய *நித்திய* நியாயத்தீர்ப்புக்கு நடைமுறைப்படுபவையாக உள்ளன (காண்க 7:21-27). ஒரு நாளில் நாம் ஒவ்வொருவரும் கர்த்தருக்கு முன்பாக நின்றுகொண்டு, "தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்புவிக்க" வேண்டும் (ரோமர் 14:12). முடிவில் இந்த நியாயத்தீர்ப்பே பொருட்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

நீங்கள் பெரிய வெள்ளைச் சிங்காசனத்திற்கு முன்பாக நின்று (வெளிப்படுத்தின விசேஷம் 20:11), நீங்கள் பிறரைத் தீர்ப்பிட்டபடியே தீர்ப்பிடப்படுவதாக, நீங்கள் மற்றவர்களை அளந்த அளவையின்படியே நீங்களும் அளக்கப்படுவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் இவ்வகையில் நியாயந்தீர்க்கப்பட்டால், நீங்கள் வலதுபுறம் செல்வீர்களா அல்லது

*இடதுபுறம் செல்வீர்களா (மத்தேயு 25:31-33)? யாக்கோபு நிருபத்தில் உள்ள இரக்கத்தை உறைய வைக்கும் பின்வரும் வார்த்தைகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்" (யாக்கோபு 2:13அ).*

***பொது அறிவு உணர்வின் அவசியம்***

*ஒருவேளை நான், மத்தேயு 7:1-12ல் காணப்படுகிற புத்திகூறுதல்கள் குறித்துச் சற்றே பொது அறிவு உணர்வு பயன்படுத்தப்பட வேண்டும் என்று கூறுவதற்காகச் சற்றே தாமதிக்க வேண்டியுள்ளது எனலாம். நாம் எந்த அளவிற்குத் தீர்ப்பிடுபவர்களாக இருந்தோம் என்பதே தெய்வீக நியாயத்தீர்ப்பின் ஒரே ஒரு காரணியாக இருக்கும் என்று 1 மற்றும் 2ம் வசனங்களில் இயேசு கூறவில்லை. ஒருவர் எவ்வாறு வாழ்ந்தாலும், ஒவ்வொருவரும் சரியானவர்களாகவே இருக்கிறார் என்று நாம் நினைத்தால், நாம் ஆவிக்குரிய வகையில் சரியானவர்களாகவே இருக்கிறோம் என்று தேவனும் கூறுவார் என்று அவர் [இயேசு] போதிக்கவில்லை. மலைப்பிரசங்கத்தில் எஞ்சியுள்ள பகுதி மாத்திரமே நாம் கொண்டிருக்கும் எல்லாமுமாக இருந்தாலும், 7:1, 2ஐக் குறித்த அப்படிப்பட்டதொரு விளக்கம் உண்மையற்றதாக இருக்கும் என்பதை நாம் உய்த்துணர்வோம். இந்தப் பிரசங்கத்தின் முடிவில் இயேசு, தாம் கூறியவற்றை கேட்டு அவற்றைச் செய்கிறவர், கன்மலையின்மீது தமது வீட்டைக் கட்டிய புத்தியுள்ள மனிதர் போல் இருக்கிறார் என்று கூறினார் (7:24, 25).*

***தாழ்மையின் அவசியம்***

*இயேசு எதை வலியுறுத்திக் கொண்டிருந்தார்? மற்ற முக்கியமான கொள்கைகளுக்கு மத்தியில், இது ஒன்றாக உள்ளது: நாம் தொடர்ந்து நியாயத்தீர்ப்புகளைச் செய்ய வேண்டி இருந்தாலும், நாம் தேவனாக இருப்பதில்லை. இதே சத்தியத்தைப் பவுலும் வலியுறுத்தினார்:*

> *மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்திரவாதி ... (ரோமர் 14:4).*
>
> *... நான் உங்களாலேயாவது ... தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்ப காரியமாயிருக்கிறது; நானும் என்னைக்குறித்துத் தீர்ப்புச் சொல் லுகிறதில்லை. ... என்னை நியாயம் விசாரிக்கிறவர் கர்த்தரே. ஆனதால், கர்த்தர் வருமளவும் நீங்கள் காலத்துக்குமுன்னே யாதொன்றைக்குறித்தும் தீர்ப்புச்சொல்லாதிருங்கள்; இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்; அப்பொழுது அவனவனுக்குரிய புகழ்ச்சி தேவனால் உண்டாகும் (1 கொரிந்தியர் 4:3-5).*

*இதை, ஜான் R. W. ஸ்டாட் அவர்கள் பின்வருமாறு எழுதினார்: "நாம் (மிருகங்களிடம் இருந்து நம்மைத் தனித்துவப்படுத்திக் காண்பிக்க உதவும் நமது திறனாய்வுச் சக்திகளை நீக்கிப்போடுதவன் மூலம்) மனிதர்களாக இருப்பதை விட்டொழிக்கும்படி இயேசு நமக்குக் கூறவில்லை. ஆனால் (நியாயாதிபதிகளாக நம்மை நாமே அமைத்துக்கொள்வதன் மூலம்) தேவனாக இருத்தலுக்கான*

*தவறான யூகம் கொண்ட பேராவலைத் துறந்துவிடும்படி அவர் நமக்குக் கூறுகிறார்.”[7] நாம் தேவனாக இருப்பதில்லை என்பதால், நமது நியாயத்தீர்ப்புகள் யாவும் தவறானவையாக இருக்கும் என்பது நிச்சயம். மற்றவர்களுடனான நமது உறவுகளில் நாம், நிறைவில் தேவனுக்கு முன்பாக நாமும் அவர்களும் நிற்போம் என்பதையும், தேவனே நிறைவு நியாயத்தீர்ப்பை ஏற்படுத்துவார் என்பதையும் சிந்தையில் கொள்வது அவசியம். ஆகவே மற்றவர்களுடனான நமது உறவுகளில் நாம், இரக்கம் நிறைந்தவர்களாக, தயவுள்ளவர்களாக மற்றும் பொறுமையுள்ளவர்களாக இருப்போமாக.*

## முடிவுரை

*மத்தேயு 7:1-12ல் இயேசு முதலில், மக்களுடன் நாம் இணக்கமாக இருக்க விரும்பினால், தீர்ப்பிடுபவர்களாக இருப்பதை நாம் நிறுத்த வேண்டும் என்று அறிவிக்கிறார். மத்தேயு 7:3-12ன் மீதான பாடத்தில் நாம், நமது வேதபாட வசனப் பகுதியில் இருந்து ஐந்து கூடுதல் ஆலோசனைகளைத் தரவழைப்போம். நாம் மற்றவர்களுடன் இணக்கமாக இருக்க விரும்பினால் ...*

- *நமது சொந்த வாழ்வில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதில் நமது முதல் அக்கறை இருக்க வேண்டும் (வசனங்கள் 3-5).*
- *மற்றவர்களுக்கு உதவுவதற்காக நமது முயற்சிகள், தாழ்மை மற்றும் கூருணர்வு ஆகியவற்றினால் பண்புபடுத்தப்பட வேண்டும் (வசனம் 5).*
- *ஒவ்வொருவரும் வேறுபட்டவர்கள் என்பதை நாம் உணர்ந்தறிய வேண்டும் - மற்றும் நாம் அந்த சிரமத்தைக் கையாள்வது எவ்வாறு என்பதைக் கற்றுக்கொள்ளவும் முயற்சி செய்ய வேண்டும் (வசனம் 6).*
- *நாம் தேவனைச் சார்ந்திருக்க வேண்டும் (வசனங்கள் 7-11).*
- *நாம் பொன்விதியின்படி வாழ வேண்டும் (வசனம் 12).*

*மற்றவர்களுடனான நமது உறவைப்பற்றி நாம் கலந்துரையாடியுள்ளோம். தேவனுடனான நமது உறவைப் பற்றிய ஒருசில வார்த்தைகளுடன் இந்தப் பாடத்தை முடிக்க என்னை அனுமதியுங்கள். இயேசுவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெறுபவர்கள் இரட்சிக்கப்படுவார்கள் (மாற்கு 16:16), மரணபரியந்தம் உண்மையாயிருப்பவர்கள் ஜீவகிரீடத்தைப் பெறுவார்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 2:10) என்று இயேசு கூறினார். அவரது ஏவுதல் பெற்ற அப்போஸ்தலர் மூலமாக அவர், பாவம் செய்கிற கிறிஸ்தவர்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்றால், அவர்கள் மனந்திரும்பி ஜெபிக்க வேண்டும் என்று கூறினார் (நடபடிகள் 8:22). இவைகள் எனது தீர்ப்புகள் அல்ல; இது தேவனுடைய வசனத்தின் தெளிவான போதனையாக உள்ளது. இந்த போதனைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளுதல் அல்லது புறக்கணித்தல் - என்பது நீங்கள் உங்கள் நித்தியத்தை எங்கு செலவிடுவீர்கள் என்பதைத் தீர்மானிக்கும் (மத்தேயு 7:21-23, 24-27). நீங்கள் ஒரு கிறிஸ்தவராவது தேவையென்றால் அல்லது மீளக்கட்டுவிக்கப்படுதல் தேவையென்றால், தயவு செய்து அதை உடனே செய்யுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]*“தீர்ப்பிடுதல்” என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை நிகழ்காலத்தில் உள்ளது,*

இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. [2]Charles B, Williams, *The New Testament: A Translation in the Language of the People* (Chicago: Moody Press, 1949), 23. [3]மலைப்பிரசங்கம் மீதான நமது படிப்புகளில் நாம், வேதபாரகர்கள் மற்றும் பரிசேயர்கள் பற்றிய இயேசுவின் நேரடியான மற்றும் மறைமுகமான குறிப்புகள் சிலவற்றை ஏற்கனவே கண்டுள்ளோம். [4]அமெரிக்காவில் இது உண்மையாக உள்ளது. நீங்கள் வாழும் இடத்திற்கேற்ப இதை மறுபொழிப்புரை செய்துகொள்ளுங்கள். [5]உங்கள் உரையைக் கேட்பவர்கள் அடையாளம் காணக்கூடிய தீர்ப்பிடுதலின் சொல்விளக்கங்களைப் பயன்படுத்துங்கள். [6]லூக்கா 6:38ம் வசனம், கொடுத்தலின் ஆசீர்வாதம் மீதான மாபெரும் வசனப்பகுதியாக உள்ளது. கொடுத்தல் பற்றிப் பொதுவான நடைமுறைப் பயன்பாடு ஏற்படுத்தப்பட முடியும், ஆனால் சந்தர்ப்பப்பொருளில் இது விசேஷமாக, இரக்கம் "கொடுப்பவர்" இரக்கம் "பெறுவார்" என்ற உண்மைக்குக் குறிப்பைக் கொண்டுள்ளது. [7]John R. W. Stott, *The Message of the Sermon on the Mount* (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1978), 177.